[illegible]

( [illegible] )

[illegible]

[illegible]

[illegible]

C-,892MKS4,K
NO5
11975o

உ

சந்திரசேகரர் துணை.

# சகல
## நாடகக் கம்பெனியாராலும்
ஆடிவருகின்ற
குலசேகர் யென்னும் இயற்பெயருடைய

# நல்லதங்காள் சரித்திரம்.

(முதற்பாகம்.)



மதுரைமாநகரம், ம-ா-ா-ஸ்ரீ,
சுந்தர தெய்வ வீர குமார கவிராசர்
கந்தசாமிபிள்ளை யவர்களால் இயற்றப்பட்டு,
சென்னை குனை:
கு. நாதமுனிமுதலியாரவர்களது
தையநாயகியம்மன் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை.] [அணா-3.

ரிஜிஸ்டர் காபிரைட்.

1905.

உ

சுந்தரகணேசர் துணை.

# சகல.

## நாடககம்பனியாரால்

ஆடிவருகின்ற.

குலசேகரி யென்னும்

## இயற்பெயருடைய

# நல்லதங்காள் சரித்திரம்.

(முதற்பாகம்.)

இஃது,

மதுரைமாநகரம். ம-ள-ள-ஸ்ரீ,

சுந்தர ஜெய வீர சூர தீர கவிராஜ

## கந்தசாமிபிள்ளை யவர்களால்

இயற்றப்பட்டு,


சென்னை, சூளை.

## ஸ்ரீ - நாதமுனிமுதலியாரவர்களது

தையநாயகியம்மன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.


---


ரிஜிஸ்டர் காபிரைட்.



இதன் விலை.] [அணா 3

1905.

உ

சரஸ்வதி துணை.

# ரிஜிஸ்டர்காப்பிரைட்டின்

# அறிவிப்பு.

இதனால் சகலமான கனதனவான்களுக்குந் தெரியப்படுத்துவதுயாதெனில், இந்த குலசேகரி யென்னும் இயற்பெயருடைய நல்லதங்காள் சரித்திரத்தை மதுரைமாநகரம் சுந்தர ஜெயவீரசூரதீர கவிராஜ கந்தசாமிபிள்ளை அவர்களால் இயற்றப்பட்டு யானகிய கு. நாதமுனி முதலியாரவர்களால் பொருளுதவிபுரிந்து சகல சுதந்திரத்துடன்பெற்றுக்கொண்டு கனம்பொருந்திய கெவர்ன்மெண்டார் அவர்களது 1905வருத்திய 25-வது ஆக்ட்டு 20-வதுசெக்ஷன் 8வது ரூல்சின் பிரகார [ரிஜிஸ்டர்காப்பிரைட்] செய்யப்பட்டிருக்கிற படியால் என்னுடைய உத்திரவின்றி இந்நூலை எவர்களும் அச்சிடக்கூடாது.

இப்படிக்கு.

கு. நாதமுனி முதலியார்.

உ

கணபதி துணை.

# விளம்பரம்.

இதனால் சகலமானவர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில் சென்னை சூளை கோணத்தெருவென்று வழங்கும் காளத்தியப்பமுதலி வீதி10-வது நெம்பர் வீட்டில் ஸ்தாபித்திருக்கும் தையநாயகியம்மன் அச்சுக்கூடத்தில் தமிழ், தெலுங்கு, கிரந்தம், அஹுக்கு முதலிய புத்தகங்களும், காலேஜிப்புத்தகங்களும், ஆக்ட்டுப் புத்தகங்களும், சித்தர்கள்பாடிய சோதிட வைத்தியபுத்தகங்களும், இலக்கணஇலக்கியமுதலாகிய சில்லரைத்திருசுப்புத்தகங்களும் விற்பனைக்குத்தயாராயிருக்கின்றபடியால் வேண்டுபவர்கள் அடியிற்கண்ட எமதுமேல்விலாசத்திற்கு யெழுதி வி. பி. மூலமாய் பெற்றுக்கொள்ளலாம். மேலும் 10-ரூபாய்க்குமேற்படுமாகில் பாதிபணம் முன்னுதாயனுப்ப வேண்டும்.

உ

சுந்தரகணேசர் துணை.

## குலசேகரி என்னும்

இயற்பெயருடைய

# நல்லதங்காள் சரித்திரம்.

கணேசர் - தரு.

பலபீமா பல்பீமாவென்ற வர்ணமெட்டு.

கணநாதா கணநாதா
கணபதியெனும் குணநிதியா ஓம். (கண)
மூஷிகவாகன மோதகஹஸ்தா
மூலாதாரப்பொருளான பிரணவஜோதி. (கண)
பார்வதிபால பக்தர்கள்நேயா
காப்பதுடன்கடனே கஜமுகனேஓம். (கண)

இராமலிங்க மஹாராஜன் விருத்தம்.

உலகெலாஞ்செழித்துவாழ்க உம்பர்கள்நாளும்வாழ்க
பலகலையுணர்ந்தோர்வாழ்க பண்ணவர்முனிவர்வாழ்க
நிலவுசேர்சடையாய்ஞான நிதியெனும்பரமேசானும்
நிலைத்திடவெனதுசெங்கோல் நிமலனேஅருள்செய்வாயே.

(மந்திரி-வசனம்.) அரசே நமஸ்கரிக்கின்றேன்.

இராமலிங்கராஜன்(வசனம்.) கல்யாண மந்திரி!

மந்திரி-வசனம்.

அரசே! நீர் யாது மனவருத்தமெய்தலானீரோ, யான் கவனிக்குணர்க விபரமாய்ப் புகல்வீர்.

இராமலிங்கராஜன்-வசனம்.

மந்திரி என் சந்ததிபெருக மைந்தனில்லையே யென்று விசனப்படலாயினேன்.

மந்திரி-வசனம்.

அரசே! நீர் இதைக்குறித்து விசனப்படவேண்டாம். நாமெவ்வளவு புண்ணியஞ் செய்திருக்கின்றோமோ அவ்வளவே கிடைக்குமன்றி, வீணாக விசனப்படுவது நன்கல்ல.

### யாத்திரைப் பிராமணாள் பிராப்த்தம்.

பிராமணாள் (வசனம்) சேவகா யாங்கள்வந்திருப்பதாக உமது அரசனுக்குத் தெரிவிப்பீர்

சேவகன் (வசனம்) அப்படியே மகாபாக்கியம் சுவாமி.

,, அரசேயாத்திரைப்பிராமணாள் நமது அரண்மனையை நாடிவந்திருக்கின்றனர் பிரபு.

இராஜன் (வசனம்) மகாசந்தோஷம் வரவழைப்பாய்.

சேவகன் (வசனம்) வருவீர் சுவாமிகாள்.

### பிராமணர் வருதல்.

இராஜன் (வசனம்) நமஸ்காரம் வருவீர் வருவீர்.

பிராமணர் (வசனம்) சுபமஸ்த்து சுபமஸ்த்து அரசே. மங்களானந்தமாய்அரசுரிமைபுரிவீர்

இராஜன்-(வசனம்) சுவாமி அடியேன்மனதில் ஓர் விசனமெய்தியது அஃதென்னவெனில் என்சந்ததி பெருக மைந்தன் ஜனிக்கவில்லையேயென அதிகவருத்தப் படுகிறேன்.

பிராமணர்-(வசனம்) அரசே! நீர்யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம் ஆதியில் மிருகண்டேயர் மைந்தன் வரப்பிரசாதம் பெறுதற்கு பத்தினியுடன் கானகமணுகி கர்த்தனைத்தொழுது அருந்தபம்புரிகையில் பரமேஸ்வரன் கிருபர்ணைக்கமெய்தி புத்திரசந்தான வரமளித்தனர். ஆகையால் நீயும் அவ்விதமே நின்பத்தினியுடன் வனத்திற்சென்றுதபம் புரிவாயாகில் பரமேஸ்வரன் கிருபையால் புத்திரசந்தான வரப்பிரசாதம் பெறுவீர் மஹாப்ரபு.



இராஜன் - (வசனம்.) அப்படியே மஹாபாக்கியம் சுவாமிகாள் மந்திரி இந்தபிராமணர்களுக்குவேண்டிய பொன்பொருள் தருகுவாய்

மந்திரி-(வசனம்) அப்படியே மஹாபாக்கியம் அரசே.

### யாத்திரை பிராமணர் போய்விடுவது.

இராமலிங்கராஜன்-வசனம்.

மந்திரி யான் கானகஞ்சென்று பரமனைக்குறித்து அருந்தபம் புரிந்து புத்திரசந்தான வரம்பெற்று வருகின்றேன். ஆகையால். நான் வருகிறவரையிலும்; நீ இந்த நகரிலைப் பரிபாலனஞ் செய்துக்கொண்டிருப்பாய்.

(மந்திரி-வசனம்.) அப்படியே மஹாபாக்கியம் வேந்தே.

{ இராமலிங்கமஹாராஜன் மாளிகைக்குச் செல்லுதல். }



## இராஜபத்தினி - தரு.

ஸ்ரீகணபதி சுகுண யென்ற (வர்ணமெட்டு.)

பிராணநாதா நமக்கினிய புத்ரரில்லா துயருற்றேனே. (பிரா)

தரணியில்நாம் மைந்தனில்லா
சிறுமையுற்ற வாறுபோல
திகைக்கலாச்சே சிவன்செயலோ. (பிராண)

வாழையடி வாழையாக
வளரும்நமது வம்ஸத்திற்கு
மைந்தனில்லா சிந்தைமெலிந்தேன். (பிராண)

வசனம்.

பிராணநாதா! இத்தனை காலமாய் நமது சந்ததிபெருக மைந்தன் ஜனிக்கவில்லையேயென என்மனம் அதிக துயருற்று விசனப்படுகின்றேனே, இனி யாமென் செய்வோம்.

## இராஜன் - வசனம்.

பெண்ணே! நீ யாதொன்றுக்கும் விசனப்படவேண்டாம், நாம் இத்தருணமே ஆரண்யஞ்சென்று பரமேஸ்வரனைக் குறித்து அருந்தபம் புரிவோமாகில் பரமன் கிருபானோக்கமெய்தி நமக்கு புத்ரபாக்ய வரப்ரசாத மளித்திடுவர் வருவாய் மதே.

## இராஜபத்தினி வசனம்.

அப்படியே மஹாபாக்கியம் பிராணநாதா!

{ இராஜன் தன் பத்தினியுடன்
தபநிலையணுகி தவம்புரிதல். }

## இராஜன் தேவாரம்.

சந்த்ரசேகரனேநித்ய சதாசிவா கைலைவாழ்வே
எர்தனின்வம்ஸமோங்கி இந்நகர்பாலிக்க
மைந்தன்பாக்யமெனக்கு மஹேஸ்வராவரந்தந்தேயென்
சிந்தையும்மகிழச்செய்வாய் சிவசிவாஉமாமயேசா.





## ஈஸ்வரன் ப்ராப்தம்.

ஈஸ்வரன் சொல் - விருத்தம்.

மதுரைமாநகரந்தன்னில் மகிழதாயரசுசெய்யும்
நீதிமிகும்அரசேயுந்தன் நிலையைப்பான்மெச்சியன்பாய்
சுதனுடன்புத்ரியுந்தான் சுகுணனேயுனக்களித்தேன்
ததியினில்நகரஞ்சென்று சந்தோஷமெய்துவாயே.

வசனம்.

அரசே! நின் தவத்திற்கு மனமகிழ்ந்து, உன் இஷ்டப்படியே வரந்தந்தேன். இனி உனது நகரஞ்சென்று நின் பத்தினியுடனே இல்வாழ்க்கையிற் சிறந்து வாழ்ந்திருப்பிராகில் உனது பத்தினியின் கர்ப்பத்தில் ஓர் ஆண்குழந்தையும் பெண்குழந்தையும் பிறக்கும் அவர்களால் உனக்கு வெகு கீர்த்தியுண்டாகுமென் றுணர்வாய்.

இராமலிங்கமஹாராஜன் வசனம்,

அப்படியே மஹாபாக்கியம் பரமேஸ்வரா!

{ பரமேஸ்வரன் கைலைக்குச் செல்லுதல்
இராமலிங்கனும் இந்திராணியும்
தனது நகரத்திற்கு வருதல். }

(இராஜபுத்திரிக்கு மின்னே கற்பிக்குதல்.)

இராமலிங்கராஜன் தர்பார்.

இராமலிங்கராஜன் வசனம்.


மந்திரி எனது அருந்தவப் புத்திரியாகிய நல்லதங்கைக்கு விவாகஞ் செய்யவேண்டி மானாமதுரையால் குர்நளபூபதிக்குத் திருமண வபேக்ஷையைக் கடிதமூலமாய்த் தெரிவித்து இங்ஙனம் அழைத்துக் கொண்டு வருவாய்.

மந்திரி வசனம்.

அப்படியே மகாபாக்கியம் அரசே!

(மந்திரி குர்நளதேசம் போகுதல்.)

குர்நளபூபதி தர்பார்.



மதுரைதேசத்தின் மந்திரி பிரவேசிக்குதல்.

குர்நளபூபதி(வசனம்.) யாது விசேஷம் தெரிவிப்பீர்.

மதுரை தேசத்தின் மந்திரி வசனம்.

அரசே மதுரைமாநகரைப் பரிபாலனஞ்செய்யும் எமது அரசனாகிய இராமலிங்கமகாராஜன் அருந்தவப் புத்திரியாருக்குத் தமது புத்திரனாகிய அலங்காரபூபதியை திருமணஞ்செய்ய வேண்டுமென்பதாக உம்மை வரவழைப்பதாயினர்.

குர்நளபூபதி வசனம்.

அப்படியே மகா சந்தோஷம்.

{ குர்நளபூபதி சகலவகைச் சேனையுடன் தனது புத்திரியை அழைத்துக்கொண்டு வருதல். }

குர்நளபூபதி வசனம்.

சேனாபதி! இந்த நற்செய்தியை இந்நகரத்தாருக்குத் தெரிவித்துப் பயணம் வைத்திருப்பதாகத் தெரிவிப்பாய்.



சேவகன் வசனம்.

அப்படியே மகாபாக்கியம் பிரபு.

(சேவகன் அரண்மனைக்கு வருதல்.)

இராமலிங்கராஜன் தர்பார்.

சேவகன் வசனம்.

அரசே! குர்நளபூபதி தனதுசேனைகளுடன் நகரவாசலில் வந்திருக்கின்றனர். உம்மைவந்து எதிர்கொண்டழைத்துச் செல்லும்படியாய் ஆக்ஞாபித்தனர்.

இராமலிங்கராஜன் வசனம்.

சரி அவ்விதமே எதிர்கொண்டழைத்து வருவோம், வருவீர் மந்திரிகாள்.

{ இராமலிங்க ராஜன் குர்நளபூபதியை அரண்மனையில் அழைத்துக்கொண்டு வருதல். }

குர்நளபூபதி வசனம்.

அரசே என்னை யாது காரணமாக வரவழைத்தீர்.

இராமலிங்கராஜன் வசனம்.

அரசே எனது அருந்தவப்புத்திரியாருக்கு உமது புத்திரனைத் திருமணஞ்செய்ய வேண்டுமென ஆலோசித்திருக்கின்றேன், அதினும் உமது கருத்தென்னவோ தெரிவிப்பீர்.

குர்நளபூபதி(வசனம்) அப்படியே மகாசந்தோஷம்.

{ நல்லதங்கைக்கும் அலங்காரிக்கும் திருமணம் புரிதல். }

குர்நளபூபதி வசனம்.

அப்பனே மாப்பிள்ளை போய் வருகின்றேன், இனி யுமது மனையாளுடன் கவலையற வாழ்ந்திருப்பாயப்பா.

அலங்காரி வசனம்.

என்னைப் பெற்ற தாய்தந்தையே நீங்கள் மாதத்திற்கு மூன்று தடவை இங்குவந்து என்னைப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும்.

குந்தளபூபதி வசனம். அப்படியே நல்லதம்மணி.

{ கலியாணத்திற்கு வந்தவர்
அவரவரிருப்பிடம் போய்விடுதல். }

——✻——

நல்லதம்பிக்கு பட்டாபிஷேகம் புரிதல்.

## இராமலிங்கராஜன் வசனம்.

புத்திரா யான் தவத்திற்குப் போகின்றேன் உனது சகோதரி யாகிய நல்லதங்கைக்கு நீயே முன்னிருந்து திருமணவைபவம்பெருமையாய் நடத்தவேண்டும்.

நல்லதம்பி (வசனம்) அப்படியே மஹாபாக்கியம் தந்தையே.

{ இராமலிங்கனும் இந்திராணியும்
ஆவியகன்று, அரன்பதியணுகுதல். }

## காசிராஜன் தர்பார்.

காசிராஜன்-வசனம்.

மந்திரி மதுரை நகரத்தின் வேந்தனாகிய நல்லதம்பி சகோதரியாகிய அழகானந்த சிங்காரரூப சௌந்தரியை யான் திருமணம்புரிந்துக் கொள்வதற்கு ஆவலுற்றிருக்கின்றேன், ஆகையால் யான் வருகிற வரையினும் இந்நகரத்தை பரிபாலனஞ் செய்துக்கொண்டிருப்பாய்.

மந்திரி வசனம்.

அப்படியே மஹா பாக்கியம் அரசே!

## காசிராஜன் மதுரைக்கு வருதல்-தரு.

வடிவழகனைக் காண்பேனோ (யென்ற மெட்டு.)

இத்தருணமே செல்வேனே
இனியமதுரை சென்றே யாமும் - அந்த
மாதினை அன்பாய் மணம்புரிந்
திடுவேன் ஆவலாய் மேவியே. (இந்த)



காசிராஜன் வசனம்.

நாம் இதோ அரண்மனையில் வந்துவிட்டோம், சேவகா யான் வந்திருப்பதாய் உமது அரசனுக்குத் தெரிவிப்பாய்.

சேவகன் (வசனம்) அப்படியே தெரிவிக்கின்றேன் அரசே மஹாப்ரபு யாவரோ? ஓர் அரசன் நம்மை நாடி வந்தனர்.

நல்லதம்பி (வசனம்) மஹா சந்தோஷம் வரவழைப்பாய்.

சேவகன் (வசனம்) வருவீர் அரசே.



காசிராஜன் தரு.

ராகம் ஆவிநீயே யென் அருமை (யென்ற மெட்டு.)

——(✻)——

நீ இமன்னனின் சமுகத்திலன்புடன்
வந்தனம்தந்தேன் யான் மஹா ராஜேஸ்வரா.

## நல்லதம்பி தரு.

மஹா ராஜே நின் தேசம்யாதோ
புகல்வீர் எனக்கன்புடன்

(காசிபன் நல்லதம்பி)

காசிதேசாரியான் உனதுபெயரென்ன

(காசிபன் நல்லதம்பி)

காசிபன்யானே எதைநாடிவந்தீர்

காசிபன்-வசனம்.

அரசே! [illegible]யான் ஒருகாரணமாக இங்ஙனம் வந்தேன். நின்சமுகம் புகல்வதற்கு ஆவலுற்றேன்.

நல்லதம்பி வசனம்.

மஹா சந்தோஷம் அவ்விதமே நின்கருத்தினை வெளியிடுவீர்.

காசிராஜன்-வசனம்.

மெத்தசந்தோஷம் கவனிப்பீர்.

காசிராஜன்-தரு.

ஆஹா ஒரு உரையிரண்டு (யென்றவர்ணமெட்டு.)

அரசேநின்மனை தன்னிலோர்கன்னிகை

இருப்பதையுணர்ந்து வந்தேன்யான்.

நல்லதம்பி சொல்லல்.

எனது சகோதரி இருப்பதுண்மை.


(காசிராஜன் நல்லதம்பி)

திருமணம்புரிவேன்யான் நின்மனச்சம்மதிதானே.

நல்லதம்பி-வசனம்.

அரசே உலகிற் பிறந்த ஸ்திரீகள் பருவதிசையடைந்த பின்னர் அவர்களை யாதாமொரு சற்குணள புருஷனுக்குத் திருமணஞ்செய்து வைத்து மனமகிழபார்ப்பது தாய் தந்தையர் சகோதரர்முதலானவர் களுக்கு உரிய கடனாகையால் யான் என்து சகோதரியாகிய குலசேக ரியை யாவருக்கேனும் விவாகஞ்செய்து கொடுக்கவேண்டுமென்பது திண்ணம், ஆயினும் நீர்விரும்பிக் கேட்டமையால் உமது வார்த்தைக் கு யாதொரு ஆக்ஷேபனையின்றி உமக்கு என் சகோதரியை விவாகஞ் செய்து வைப்பேன் அரசே.





கலியாண சீன்.

{ நல்லதம்பி நல்லதங்கைக்கு புத்தி சொல்லுதல். }

நல்லதம்பி-தரு.

மனதின் கவலையாற்ற (யென்ற வர்ணமெட்டு.)

அருந்ததிக்குவமையான
அன்பிலகு மென்தன் தங்காய்
புருஷன்றன்மனையிற்
போய்சுகமாய் வாழ்ந்திருப்பாய்.

(நல்லதங்கை தரு.)

பிறந்திடத்தைத்தான்பிரிய
பேதையென்னாலாமோ
தருணமென்து மனம்
சஞ்சல மாகுதண்ணா.

(நல்லதம்பி தரு.)

கற்புடைய மாதர்கட்கு
கணவனே தெய்வமாகும்
பொற்கொடியே தயங்காமல்
போய்சுகமாய் வாழ்ந்திருப்பாய்.

(நல்லதங்கை தரு.)

அண்ணாவின் திருமுகத்தை
அன்புடனே கண்டேன்
பெண்ஜனனம் வாய்த்ததினால்
பிறந்திடத்த மறக்கலானேன்.

(நல்லதம்பி தரு.)

சந்திரமுகன் தேசம்வந்து
தங்கையே யான்காண்பேனுன்னை
சிந்தைத் துயருறாமல்
சென்றுவாழ்ந் திருப்பாயம்மா.

## நல்லதம்பி வசனம்.

அம்மணி! நீ யாதும் வருத்தப்படவேண்டாம், நீ நினைத்தபோ தெல்லாம் யான் உமது தேசத்தில்வந்து, உன்னைக் காண்பேன். அஞ்ச வேண்டாம் அம்மணி,

நல்லதங்கை வசனம்.

அப்படியே மஹா சந்தோஷம் போய்வருகிறேன் அண்ணா!

சீதனங்கொடுப்பது பிட்சின்.



## நல்லதங்கை விருத்தம்.

அன்னைபோலவேயென்னை ஆதரித்திடுமென்தாயே
என்னைய அண்ணியம்மா நாயகனுடனேசெல்ல
என்னமாய்மனந்துணிந்து உங்களைப்பிரிந்திருப்பேன்
என்மனம்சகிக்கவில்லை எவ்விதம்செல்வேனம்மா.



வசனம்.

அண்ணியம்மா! எனது தாய் தந்தையரைப்போல இத்தனைநா ளாய் ஆதரித் திரக்ஷித்த உங்களைவிட்டுப் பிரிந்து எனது மணாளனுட னே என்னமாய்ச்செல்வேன் அம்மா.

## அலங்காரி வசனம்.

ஆ! இதென்ன வேடிக்கையாயிருக்கின்றது எப்போதும் ஒருபுரு ஷனைக் கலியாணஞ் செய்துகொண்டோமோ அப்போதே நமக்குத் தாய்வீடு சொந்தமல்லவே, அப்படியிருக்க, நீ உன்மணாளன் வீட்டுக் குப்போக விசனப்படலாமோ யாவும் உன்னைப்போல் தானோ வந் தேன். யான் எனது தாய்வீட்டை மறந்துவிடவில்லையா? ஏன் இவ் விதம் விசனப்படுகிறாய் இனி யாதொரு மனவருத்தமுமில்லாமல் புரு ஷனுடனே போவாயம்மா.

நல்லதங்கை-வசனம். அப்படியே சென்றுவருகிறேன் அண்ணி!

## காசிராஜனும் நல்லதங்கையும், போய்விடுதல்.

அலங்காரி-வசனம்.

அப்பா விட்டுது தயரம், எத்தனைநாளாய் வீட்டில் வைத்துக் கொண்டிருப்பது, இப்போதுதான் என் மனம்போலாச்சுது இனி நம்முடைய அரசுதான்.



## காசிராஜன் தர்பார்.

மந்திரி! நமது நாட்டில் பனிரெண்டு வருஷகாலமாய் மழை யின்றியதால் நகரம் எவ்விதமா யிருக்குமோ வென்று சந்தேகிக் கின்றேன்.

மந்திரி (வசனம்.)

அரசே! நமது நாட்டில் மழையில்லாமையால் குடிகளனைவரும் நமக்குப் பகுதிப்பணம் கட்டுதற்குச் சக்தியின்றி ஊரைவிட்டு ஓடிப் போய்விட்டனர். அரண்மனை உத்தியோகஸ்தர்களுக்கு கொடுக்க வேண்டிய சம்பளத்திற்காக நம்முடைய பொக்கிஷத்திலுள்ள பொருளெல்லாம் செலவழியும் இன்னும் அநேக இரதகஜ துரகங்களையும் விற்றுக்கொடுத்தும் முடியாமல் அவர்களும் அன்னவஸ்திரத்திற்கு அலைச்சற்பட்டு அயலூருக்கு ஓடிப்போய்விட்டனர் இனி கையிலோர் காசுமில்லை அரசே!

காசிராஜன் (வசனம்.)

ஆ! மந்திரி இதென்ன அநியாயம் இனிநாம் எவ்விதமாய் ஜீவிப்பது இதைவிட இறப்பது நலமென்று யோசிக்கின்றேன்.

மந்திரி.—தரு.

பைரவி-ஆதி தாளம்.

பல்லவி.

அநியாயமாயுத்தன் ஆவிவிடுப்பதென்றால்
ஆச்சர்யமன்றோ மன்னா.

அநுபல்லவி.

மனிதர்களாகவே மாநிலத்திற்பிறந்து
வினையாலெய்துவதெல்லாம் அநுபவிப்பதன்றி. (அநி)

சரணங்கள்.

பாபபுண்ணியத்தினால் வாய்த்தசரீரமென்று
பகுத்தறியாமற்சும்மா பரதவிப்பதுதன்றோ
தீபப்ரகாசமென் றிலகுஞ்சர்வேசன்றன்
திருவடியைத்தொழுதால் தீவினையொழிந்திடும். (அநி)

உலகிற்பிறந்தோரை ஊழ்வினைவிடுக்குமோ
உத்தமாகவனிப்பீர் பூதலந்தன்னிலே
நிலவுஞ்சிலதுகாலம் இருளுஞ்சிலதுகாலம்
நிதானித்துகவனிப்போர் நித்யராய்வாழ்வார்கள். (அநி)



தாழ்வுவந்துதேயென்று சஞ்சலப்படவேண்டாம்
தைரியமாயிருப்பீர் தாரணிதன்னிலே
வாழ்வுஞ்சிலதுகாலம் வறுமைசிலதுகாலம்
வருந்தாற்சுகதுக்கம் இரண்டும்சமமாய்த்தோற்றும். (அநி)

பஞ்சமேவிட்டதால் பிராணனைவிடுவாரோ
பாராளும்மன்னர்கள் பயந்துதுடிப்பாரோ
அஞ்சித்தயங்குமல் அனுதினம்பரமேசன்
அடிமலர்தனையெண்ணி ஆலோசித்தனையாமல். (அநி)

மாநகரையிழந்து மனைவிமைந்தனையிழந்து
மயானத்தையிருந்திடினும் மனக்கவலையின்றி
வானவர்புகழ்ந்திட வருத்தமின்றியோர்ந்த
வந்தரசுபுரிந்த மன்னனைத்தியருந்ததே. (அநி)

(வசனம்.)

அரசே! நமது தேசத்தில் மழைபொழியாமல் பஞ்சமேவிட்டதே யென்று நீர்பயந்து மனமிரண்டு விசனப்படுவது நன்கல்ல, உலகத்திற்பிறந்த மாந்தர்கட்குச் சுகதுக்கம் வாய்ப்பது தெய்வாதீனமாகையால் உமக்கு இவ்விதவேழைமைத்தனம் வாய்ந்ததேயென்று துயரப்படாதீர். முற்காலத்தில் அயோத்தியாபுரி வேந்தனாகிய அரிச்சந்திரன் அகஸ்மாத்தாய்த் தனது தேசத்தை விஸ்வாமித்திரனுக்குத் தாரைவார்த்து மனைவி மைந்தனையும் விற்று மயானகாவலனுக்கு அடிமையாகி அனேக துயரப்பட்டும் தைரியத்தைவிடாமலிருந்தபடியினால் தெய்வாதீனமாய் தனக்கு நற்காலம் நேர்ந்ததற்கிணங்க பரமேஸ்வரன் கிருபையால் தனது மனைவி மைந்தருடன் அயோத்தியா புரிக்குச்சென்று இராஜரீகஞ் செய்திருந்தனர். ஆகையால், அரசே நீர் யாதும் மனவருத்தப்படவேண்டாம், நமக்கு நற்காலம் வரும்போது, கருணைபகவான் கிருபையால் மழைபொழிந்து நம்துதேசம் செழிப்புற்றிருக்கும், அஞ்சாதீர்.

காசிராஜன் (வசனம்.)

ஆ! பரமேஸ்வரா! அடியேன் குறைதவிர்த்து ஆதரிப்பீர் கருணையங்கடலே.

(மாளிகை சீன்)



{ நல்லதங்காளும், பிள்ளைகளும் பசியால் வருந்தப்படுவது. }

ஞானசேகரன் - தரு.

பெற்றபசிக்குதம்மா என்தாயே - அம்மா
சித்திரங்காதேனே என்தாயே.

நல்லதங்காள் - தரு.

சற்றுபொறுப்பீரினி மைந்தர்களே - உமது
தந்தைவந்தாற்சொல்லுவோம் மைந்தர்களே.

பிள்ளைகள் - தரு.

காதையடைக்குதம்மா என்தாயே - பசி
வாதைவருத்துதே என்தாயே.

நல்லதங்காள் - தரு.

நமதுகாலையின்விதம் ஆச்சதே - ஐயோ
தனயர்பசியெங்கேறுத லாச்சதே.

பிள்ளைகள் - தரு.

கண்களிரண்டுஞ்சோர் தென்செயவோம் - பசியால்
காதையடைக்குதினி யென்தாயே.



நல்லதங்காள் - தரு.

பாலர்படுந்துயரம் சகியேனே - ஈனம்
பதைத்துத்துடிக்குதையோ சிவசிவமே.

நல்லதங்காள் (வசனம்.)

மைந்தர்காள்! நீங்கள் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். உமது அம்மானாகிய எனது தமயன் மதுரைமாநகரத்தைப் பரிபாலனஞ்செய்கின்றார். நாம் அங்ஙனம் சென்றால் யாதொரு துயரமுமின்றி ஜீவித்திருப்போம் மக்களே.

பிள்ளைகள் (வசனம்.)

ஆம்! அம்மணி அவ்விதமே சென்றால் பசியில்லாமல் சாப்பிட்டுக்கொண்டிருப்போம் எங்களைப்பெற்ற தாயே.



காசிராஜன் ப்ரரப்தம்.

(காசிராஜன்-வசனம்.)

பெண்ணே! குலசேகரி யாது முகவாட்டத்துட னிருக்கின்றனை.

நல்லதங்காள் தரு.

ஸ்ரீ தக்கிரமதரியிந்திரனே (யென்ற வர்ணமெட்டு.)

—०ः०—

அன்னக்கலையால் மைந்தர்கள் அலைச்சற்படுகிறார்
என்னசெய்குவேன் பிராணநாதா ஏங்குதேமனம். (அன்ன)

தேனும்பாலுக்குவந்த செல்வப்பொருளெலாம்
பூதலத்திலொன்றுபாதியாய் விற்றுபுசித்தோம். (அன்ன)
இனியெவ்வாறுஜீவிப்பது என்றெண்ணியானும்
மனமெலிந்திட்டேனே மணாளதுரையே. (அன்ன)

நல்லதங்கை (வசனம்.)

பிராணநாதா! நமக்குப் பொல்லாதகாலம் சொல்லாமல்வந்தது போல நமது நாட்டில் மழை பொழியாமல் பஞ்சமேவிட்டதால் ஆஸ்தி பூஸ்திகளைத்தும்செலவழித்துஎனது மங்கிலியம் தவிரஎனக்கு சீதனமாய்வந்த நவரத்தின கசிதமாய் விளங்கும் ஆடை ஆபரணாதிகளைத்தும், ஒன்றுபாதியாய் விற்றுப் புசித்துவிட்டோம், இனி என் கையில் அரைக்காசேனுமில்லையே நமது மைந்தர்கள் பசியினால் துயரப்படுகின்றனரே, இனி யாதுசெய்வோம் பிராணபதி! இனி நாம் இவ்விதமாய்த் துயரப்படுவது நன்கல்ல. எனது மைந்தரை யழைத்துக்கொண்டு என் தமயன் தேசத்திற்குச் சென்று அங்ஙனம் சிலநாளிருந்து வருகின்றேன் உத்திரவளிப்பீர் நாதா.

காசிராஜன் தரு அடவிதன்னில்(லென்ற வர்ணமெட்டு.)

பரமேஸ்வரன் கிருபையாலே
வறுமையாற் றுயருற்றோமே.

நல்லதங்காள் தரு.

நாதாயானென் தமயன்தேசம்
நலமுடனே போய்வருவேன்.

காசிராஜன் தரு.

செல்வம்வந்த காலத்தில்யாம்
சேருடனே போய்வருவோம்.

நல்லதங்கை தரு.

தமயன்வீட்டிற் சென்றியானென்
தனயரை வளர்த்திடுவேன்.

காசிராஜன் தரு.

வறுமையுற்ற காலம்சென்றால்
பெருமைகுறை வாகும்பெண்ணே.

காசிராஜன் (வசனம்.)

பிராணநாயகி, வறுமையுற்ற காலத்தில் பந்து ஜனத்தினிடம் சென்றால் வாய்பேச்சும் பேசார்கள் பெருமைக்கும் தாழ்வாகும் போகவேண்டாம் மாதே,



நல்லதங்கை-தரு.

இராகம்-சாமா-ரூபகதாளம்.

ஆசைபிராணேசா யென் அண்ணன்வீடுசென்று
மைந்தரையான்வளர்ப்பேன்
துயர்தவிர்ப்பேன் குறைதவிர்ப்பேன்
விடைதாரும் பாலர்முகம்பாரும் - நாதா
விடைதாரும் விடைதாரும்.

காசிராஜன்-தரு.

அன்னமேசொர்ணமே மின்னற்கொடியே-யென்
அமிர்தப்பசுங்கிளியே
வனக்குயிலே கானின்மயிலே
போகாதேவீணாய் சாகாதேமாதே
போகாதே போகாதே போகாதே.

நல்லதங்கை-தரு.

அண்ணன்வீடுசென்றால் ஆபத்துண்டாகுமோ
மன்னாவிடையருள்வீர்
அருள்புரிவீர் கிருபைபுரிவீர்
தடுக்காதிரெனை தடுக்காதிரெனை
தடுக்காதீர் தடுக்காதீர் தடுக்காதீர்.

காசிராஜன்-தரு.

எந்தன்வார்த்தைமீறி செல்வதிலெந்தன்
மைந்தர்க் காபத்தானால்
துயரானால் பழியானால்
விட்டிடேன்யாதே விட்டிடேனுன்னை
விட்டிடேன் விட்டிடேன் விட்டிடேன்.

காசிராஜன் (வசனம்.)

பெண்ணே! என் சொல்லைத் தடுத்துச்செல்கின்றாய், ஆனால் என் பிள்ளைகளைப் பத்திரமாய்க் காப்பாற்றவேண்டும், அவர்களுக்கு யாதேனும் ஆபத்தானால் உன்னை இருதுண்டாய் வெட்டியெறிவேன்

நல்லதங்காள் (வசனம்.)

அப்படியே, மஹாபாக்கியம் பிராணதுரையே,

குலசேகரி என்னும் இயற்பெயருடைய
நல்லதங்காள் போகும்வழியில்
துற்சகுனங் காண்பது.



காசிராஜன் தரு.

இராகம்-கண்டா-சாப்புதாளம்.

கண்ணிகள்.

அற்சகுனங்களிதோ தோற்றுதேவழிதனில்
அயரமேதாகுமோ மாதே-மாதே-மாதே
ஒற்றைப்பார்ப்பானிதோ வருகிறனெதிரினில்
ஒதுங்காசெல்வதாகாது மாதே-மாதே-மாதே.

நல்லதங்கை - தரு.

பார்ப்பானெதிராவனும் பத்தர்வேநமக்கென்ன
பஞ்சாங்கிர்ந்திபின்வாரேன் நாதா-நாதா-நாதா
காப்பாற்றுவர்நம்மை கைலைவாழ்சர்வேசன்
கவலைப்படவேண்டாம் நாதா-நாதா-நாதா.

காசிராஜன் - தரு.

எணியைக்கொண்டுசாணான் எதிராய்வருகின்றானே
என்ன அயராகுமோ மாதே-மாதே-மாதே.
காணுமெதிரினில் ஆந்தையும் ஒரியும்
கலந்துகூடினதாமனம் மாதே-மாதே-மாதே.



நல்லதங்கை - தரு.

ஏணியைக்கொண்டுசாணான் எதிருற்றால்நமக்கென்ன
ஏங்கித்தவித்திடாதீர் நாதா-நாதா-நாதா.
வாணியருளினாலே வருகாதொருதுன்பமும்
வருத்தப்படவேண்டாம் நாதா-நாதா-நாதா.

காசிராஜன் - தரு.

ஐயோஉன்மக்களுடன் அரன்பதிசேர்வாயென்று
ஆரோஅழுகின்றார்பார் மாதே-மாதே-மாதே
பொய்யாதுஇச்சகுணம் போனால்இறந்திடுவீர்
போகாதேமதுரைக்கு மாதே-மாதே-மாதே.

நல்லதங்கை - தரு.

அவரவர்குறைதன்னை யவர்கள் நினைத்துகொண்டு
அழுதால்நமக்கென்ன நாதா-நாதா-நாதா
சிவனருளால்நமக்கு யாதுந்துயருறாது
சிந்தைமகிழ்ந்திருப்பீர் நாதா-நாதா-நாதா.

காசிராஜன் - தரு.

கட்டுச்சுருளோலை கையிற்பிடித்திதோ
களைக்கறாம்ஊராளன் மாதே-மாதே-மாதே
அட்டியில்லாமலுன் அண்ணன்வீட்டிற்போனால்
ஆவியிழந்திடுவாய் மாதே-மாதே-மாதே.

நல்லதங்கை - தரு.

பிறந்தவர்களுக்கு இருந்ததெல்லாம்பேயென
மூதோர்வாக்கியம்போல நாதா-நாதா-நாதா
வருகின்றோர்தனைப்பார்த்து ஆகாச்சகுனமென
வருத்தப்படப்போமோ நாதா-நாதா-நாதா.

நல்லதங்கை (வசனம்.)

பிராணநாதா! நீர்சொல்வதை கவனிக்கில் ஆச்சரியமாயிருக்கின்றதே, பிறந்தவர்களுக்கு இருந்ததெல்லாம் பேயென மாநிலத்தோர் புகலும் வாக்கியம் போலிருக்கின்றதே, நாதா! நம்மை போல அவர்கள் வழியிற்செல்வது வழக்கமன்றோ? அவர்களைப் பார்த்து நாம்மனமிரளுவது நன்றல்ல, நீர் யாதும் சந்தேகமெய்தாமல் எங்களை அனுப்புவீராகில் என்று அண்ணன் வீட்டிற்சென்று சிலநாளிருந்துவருகிறேன்.

காசிராசன் (வசனம்)

பெண்ணே! முன் ஜனனத்திற்செய்த ஊழ்வினைப்படியே இந்த ஜனனத்தில் அனுபவிக்கும் துயரனைத்தும் வருவது வந்தேதீரும், அன்றி ஒருவரால் தடுக்கவசமோ! உன்மனம்போற்செல்வாய்மாதே.

### நல்லதங்காள் தரு.

சிவமே துணைபுரிவாய் (யென்ற வர்ணமெட்டு.)

(*)

கானகந்தனில்வாழும் மிருகங்காள் - எந்தன்
காலமிப்படிபாமோ மிருகங்காள்
அசோகநூல்அரசனும் விருக்ஷங்காள் - என்ன
அநயாயகாலமோ தவிக்கின்றேன்
மயில்குயிலன்னங்கா ளென்செய்வேன் - எந்தன்
மைந்தருடன்துயரால் நொந்தேனே.

நல்லதங்காள் (வசனம்.)

வனமிருகங்காள்! பறவையினங்களே யான் இவ்விதமாய் மைந்தருடனே துயரப்படுவது சரியாமோ, ஆ! விதிவசமே.

## வேடன் ப்ராப்தம்.

(*)

வேடன் தரு, இயாகனே வாணி (யென்ற வர்ணமெட்டு.)

வேட்டையாம் ஆடுவோம் - வன
வேடவில்லிய சூரரே, வன (வேட்)

காட்டில்வாழ் மிருகமதை
கண்டதுண்டம் செய்குவோ மினி (வேட்)

சிறுத்தையுடன் சிங்கம்புலி
நரிகரடிகூட்ட மதோ பார் (வேட்)



குரங்குடனே முயலினமும்
மறநாய்களும் போகுது பார். (வேட்)

பொல்லாத சர்ப்பமொன்று
புஸ்ஸெனச் சீறிவருது. (வேட்)

{ நல்லதங்காள் சர்ப்பத்தைகண்டு பயப்படுவது. }

### நல்லதங்காள் சொல்-சந்தம்.

பொல்லா சர்ப்பம் சீறிவருகுது
புத்ரர்களே யென்செய்வோம்
கர்த்தன்செயலோ தெரிகிலேன் யரனே
கலவரமாகுதினி.

நல்லதங்காள் (வசனம்)

மக்களே, அதோ ஓர்சர்ப்பம் சீறிவருகிறது ஓடிவாருங்கள்.

பிள்ளைகள் (வசனம்)

ஆ! அம்மணி என்செய்வோம்.

### வேடன் சர்ப்பத்தை கொன்றுவிடுதல்.

வேடன் (வசனம்.)

ஆ! ஹா! இந்தப் பெண் யார் வெகு ரூப சவுந்தரமாயிருக்கின்றனளே, சரி இவளை எவ்விதமாயினும் நமதுவீட்டிற் கழைத்துச் செல்வோம் பெண்ணே யானுன்மீது ஆசையுற்றேன் நீ என்னுடன் வருவாயாகில் என் பத்தினியைப்போல மிகுந்த ஆசையாய் உன்னுடன் வாழ்ந்திருப்பேன் வருவாய் மாதரசே, .

நல்லதங்காள் - விருத்தம்.

கானக வேடா யுந்தன்
கர்வத்தா லெனை யிவ்வாறு
தானினைந் திட லாகுமோ
தழலினால் சாம்ப லாவாய்.

(வேடன் எரிந்துபோவது)

(நல்லதம்பி-கனவு-கண்டு-அலங்காரிக்குச்சொல்வது.)



நல்லதம்பி தரு.

ஆ! ஹா நானென் சொல்வேன் - அருமானே
ஓ ஹோ கனவொன்று கண்டேனே
பாவியானென் செய்குவேனே
பரதவிக்கின்றேன்
ஆசை தங்கையை என்றுகாண்பேனோ. (ஆ)

எழுமைந்தருட னென்றங்கை
ஆரண்யந்தன்னில்
அழுதுதுடித்திட கண்டேனே கிளியே
என்னகாலமோ அறியேன்
ஏங்குதே மனம்
பெண்ணேயான்சென்று பார்த்துவருகின்றேன். (ஆ)

நல்லதம்பி (வசனம்)

பெண்ணே! அலங்காரி! எனது தங்கையாகிய குலசேகரியானவள் வறுமையாலிளைத்து தனது தேசத்தைவிடுத்து கானகத்தில் வந்து தனது எழுபிள்ளைகளுடனே துயரப்பட்டுக் கொண்டிருப்பதாகக் கனவு கண்டெழுந்தேன் இனி இதற்கு யானென்செய்குவேன்.



நல்லதம்பி - தரு.

ஐயையோ முப்பிறப்பில் (யென்ற வர்ணமெட்டு.)

ஆ! என்தங்கையேநீ அழுதுதுடித்திடவும்
அயன்செய்தவிதியாதோ அறிகிலேனே.
தந்தையின்தவமோ தாயார்செய்திட்டதோன்போ
சற்றுமறிகிலேனே தெய்வமே.
மைந்தருபாழும்பஞ்ச மாகிதுடித்திடவும்
மாபாவியான் கனவு கண்டேனே.
மெத்தப்பசிக்குதென சத்தியழுதிடவும்
மாகாட்டில் தவிக்கலானீரோ.
முப்பிறப்பில்செய்தவினை இப்பிறப்பில்மூண்டதோ
எப்படிநான் இருப்பேன் சிவசிவமே.

அலங்காரி (வசனம)

பிராணதுரையே! நீர் இவ்விதமாய்த் துயரப்படுவதைக் கவனிக்கில் ஆச்சரியமாயிருக்கின்றதே, உமக்கென்ன பைத்தியமோ பித்தமதிகரித்தால் நித்திரையில் கனவு மாறி மாறி பலவிதமாய்க் கனவு காண்பது உலகியற்கைதானே இதை கவனியாமல் தங்கை ஏழையாய் விட்டாளே யென்று வெகுவாய் விசனப்படுகின்றீரே அவளுக்கென்ன குறைச்சல் உமது தகப்பன் பாட்டன் அருமையாய்ச் சேர்த்து வைத்த சொத்துகளை யெல்லாம் அவளுக்குச் சீதனமாய்க் கொடுத்து விட்டு என்னை இப்படி பரதேசியாக்கிவிட்டீரே. இன்னமும் சகோதரியை நினைத்துக்கொண்டு விசனப்படுகின்றீரே, இதென்ன ஆச்சர்யம்.

நல்லதம்பி (வசனம்.)

பெண்ணே! இந்த இராஜ்ஜியமும் எனது சகோதரிக்குச் சொந்தமென்று மனதில் நினைப்பாய், அவள் சுகமாயிருந்தால் போதும்.

அலங்காரி (வசனம்)

சரி! சரி! இன்னம் எனக்கு என்ன சொந்தமிருக்கின்றது, விருதாவாக யான் விஞ்சைகொள்வதிற் பயனில்லை. நாதா! இனி உமது மனம்போலவே எல்லாவற்றையும் கொடுத்துவிடும்.



## நல்லதம்பி தர்பார்.

(மந்திரி - பிரதானியர் - சூழ்ந்திருப்பது.)

குடிகள் - வசனம்.

சேவகா, யாங்கள் வந்திருப்பதாக அரசனுக்குச்சொல்வாய்.

(சேவகன்-வ-ம்.) அரசே! குடிகள் வந்திருக்கின்றார்.

(நல்லதம்பி-வ-ம்) அப்படியா! சீக்கிரம் வரவழைப்பீர்.

(குடிகள்-வ-ம்) அரசே, நமஸ்கரிக்கின்றோம்.

(நல்லதம்பி-வ-ம்) கல்யாண்! நகரவாசிகளே யாதுவிசேஷம்.

(குடிகள்-வ-ம்) அரசே! காட்டில் மிருகங்களதிகரித்து நாட்டில் வந்து யாங்களிட்ட பயிரையெல்லாம் அதாஹதஞ்செய்துஅழித்துப்போடுகின்றது. அவைகளைத் துரத்திக் கொன்று எம்மைக் காத்து இரக்ஷிக்கவேண்டும் ப்ரபு.

(நல்லதம்பி-வ-ம்) நகரவாசிகளே! உமது இஷ்டப்படியே மிருகங்களையெல்லாம் கொன்று உமக்கு யாதொரு அபாயமுமணுகாமற் காப்பாற்றுகிறேன் உமதிருப்பிடம் செல்வீர், சேவகா வேடவில்லியரை அதி தீவிரமாய் அழைத்துக்கொண்டு வருவாய்.

(சேவகன்-வ-ம்) அப்படியே, மஹா பாக்கியம் அரசே.

## வேடவில்லியர் பிராப்தம்.

(வேடர்-வசனம்) அரசே, நமஸ்கரிக்கின்றோம்.



(நல்லதம்பி-வ-ம்) வேடர்காள்! வேட்டையாடுதற்கு அதி தீவிரமாய் ஆரண்யத்திற்கு வருவீர்.

(வேடர்-வசனம்) அப்படியே மஹா பாக்கியம் அரசே.

## நல்லதம்பி வேட்டையாடுதல்.

தரு-சண்முகனே துணைவா (யென்ற வர்ணமெட்டு.)

வேட்டையாடுவோம் வாரீர் - வன
வேடவில்லியர்களே வீரரே சூரரே. (வேட்)

காட்டில்வாழ் மிருகங்கள்
நாட்டில் வராமுன்னம்
திட்சண்ய கணையேவி
மேட்டிமையாய்ச் சிதைப்போம். (வேட்)

சிங்கம்புலியோடும் கும்பகும்பாயோடுது
சிந்ரகணைகளேவி சிதைத்திடுவீரினி. (வேட்)

நல்லதம்பி (வசனம்.)

மந்திரி, நாம் வேட்டையாடிய களை தெளியும்பொருட்டு ஜலமருந்தி வருவோம் வருவீர்கள்.

(மந்திரி-வ-ம்) அப்படியே மஹாபாக்கிய அரசே!

## நல்லதங்கை தரு.

தில்லாந்திரி தில்லாந்திரி(யென்றவர்ணமெட்டு.)

நாட்டில்மழையில்லாமையால்
நகரில்பஞ்ச மாகி
காட்டில்வந்து மக்களுடன்
கலங்குகின்றேன் சிவமே.

மைந்தர்பசி யாற்களைத்து
மனந்துடித்தழவும்
சிந்தைமெலிந் துருகலானேன்
சிவமேயென்னசெய்வேன்.

உத்தமியாள் மெய்யேயானல்
உடற்பிறந்த அண்ணன்
இத்ததியே வருகவேணும்
ஈசா ஜெகதீசா.

நல்லதம்பி (வசனம்.)

அம்மணி! உன்னைப்பார்த்தால் என் தங்கையைப்போ லிருக்கின்றதே நீ யாரம்ம.

நல்லதங்கை (வசனம்) அண்ணா! யான்தான் குலசேகரி இவர்கள் எனது மைந்தர்கள்.

நல்லதம்பி (வசனம்) யாதுகாரணத்தால் இவ்வித பரதேசியைப் போலானீர்களோ? யான் கவனித்துணர்க விபரமாய்ச் சொல்வாயம்மணி.

நல்லதங்கை தரு.

அண்ணா மழை பொழியாமையால்
அரும்பஞ்சத்தாற் றிகைத்து
அன்னமில்லா வறுமையாலே
அலைச்சற் பட்டலானேம்.

நல்லதங்கை (வசனம்.)

அண்ணா! எமது நாட்டில் பனிரெண்டு வருஷகாலமாய் மழை பொழியாமல் பஞ்சம் மேலிட்டு நீங்கள் கொடுத்த சீதனவரிசைகளை யெல்லாம் விற்றுப் புசித்து கையில் காசில்லாமல் அன்ன தரித்திரத்தால் அலைச்சற்பட்டு உமது வீட்டுக்கு வருகிறேன் அண்ணா!

நல்லதம்பி - தரு.

முகாரி - ஆதிதாளம்-பல்லவி,

அம்மாகுலசேகரி ஐயோஉந்தனைக்கான
அங்கந்துடிக்குதம்மா, (அம்)

அநுபல்லவி.

இம்மாநிலந்தனில் இராஜரீகம்புரியும்
இராஜாதிபதியாயான் இருந்தும்பலனென்ன, (அம்)

சரணங்கள்.

என்தாய்வயற்றினில் இன்பாய்ப்பிறந்தாயே
என்கண்ணின்மணியைப்போல் இனிதாய்வளர்ந்தாயே



மன்னாதிமன்னன்காசி மன்னனைமணந்தாயே
மைந்தருடனே நீ. எனத்தில்வர் தழுந்தாயே, (அம்)

பல்லக்குமிடையாதோ பார்த்திபன்நாட்டிலே
பாரோர்பழித்திட வர்தாயேகாட்டிலே
செல்வச்சகோதரிநீ நீனேந்தால்யான் வருவேனே
சேர்ந்துபரதேசிபோல் துயரமாய்வந்தீரோ. (அம்)

அன்பானயென் தங்கை மைந்தர்களேநீங்கள்
அம்மாளுடன்கூட ஆரண்யமவந்தீரோ
இன்பாயுங்களுக்கு பொன்மான்பிடித்துதரரேன்
இக்ஷணமேவீட்டுக்குச் செல்வீர்மருகரே. (அம்)

வசனம்.

அம்மா! குலசேகரி நீங்களிவ்விதமாய்ப் பரதேசியாய் வரவும் யான் கண்டு துயரப்படவுமாச்சுதோ? சீக்கிரமாய் எனது வீட்டிற்குச் செல், இதோ அதி தீவிரமாய்வந்து உமக்கு வேண்டிய பொன் பொருள் தந்து அனுப்புகிறேன். இன்னும் வருஷத்திற்குப் பனிரெண்டு லக்ஷவிராகனும் உமக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறேன.

குலசேகரி (வசனம்.)

அண்ணா! யான் உன்னுடனே வந்தால் எனக்கு யாவும் சொந்தமுண்டு. நீங்களில்லாமல் யான்மாத்திரம் தனியாய்ச்சென்றால் எனது அருமை பெருமையை யார்கவனிப்பார்? அண்ணன்தான் உடற்பிறப்பு அண்ணியும், உடன்பிறந்தவளா! அண்ணா நீங்களும் எங்களுடன் வருவீர்.

நல்லதம்பி (வசனம்)

அம்மணி! எனதுபத்தினி மிகவும் நல்லவளாச்சுதே, உம்மைக் கண்டவுடனே அதிக ஆசையாய் உபசரித்து அறுசுவைப் பதார்த்துடன் திவ்யான சுகபோஜனமிட்டு ஆதரிப்பாள்.

நல்லதங்கை (வசனம்,) நீங்கள் யாது காரணமாய் இப்போது வருகேனென்கிறீர்.

நல்லதம்பி - சந்தம்.

பொன்மயபுள்ளி மானென்றுன்தன்
புத்திரர்விளையாட
இன்பாயானும்பிடித்துவருகிறேன்
இல்லத்திற்குச்செல்.


நல்லதம்பி (வசனம்.)

அம்மா! உனது பிள்ளைகள் விளையாடுவதற்கு ஓர் புள்ளிமான் பிடித்துக்கொண்டு வருகிறேன் வீட்டுக்குப்போவாயம்மா.

நல்லதங்கை (வசனம்.)

அப்படியே, மஹா சந்தோஷம் அண்ணா! பிள்ளைகளே சீக்கிரமாய் வருவீர்கள்.

பிள்ளைகள் (வசனம்) நல்ல தம்மணி!



அலங்காரி மாளிகை.

அலங்காரி (வசனம்) சகி! அவர்கள் யார் ஆட்டுமைந்தையைப் போல் வருகின்றார்களே.

சகி (வசனம்) அம்மணி உனது நாத்தி ஏழுபிள்ளைகளுடன் மிகவும் ஏழையாய்வருகின்றாள்.

அலங்காரி - தரு.

இவனைப்புகழ்ந்து (யென்ற வர்ணமெட்டு.)

பல்லவி,

ஆட்டுமந்தையைப்போல கூட்டங்கூட்டமாக
மாக்ஷிமையாய் வாரார்.

அநுபல்லவி.

நாட்டிலிவ்வனியாயம் எங்கையேகண்டதுண்டோ
வீட்டினிலுள்ளதெல்லாம் கொள்ளையடிப்பதற்கோ, (ஆட்)



சரணங்கள்,

ஒன்றிரண்டுமூன்றுனல் உலகத்திலுள்ளபடி
ஒற்றுமையாகுமென்பார்
பன்றிகுட்டிகளைப்போல் பாரோர்திகைத்திடவே
கன்றாய்பிறந்திட்டார்கள் நாட்டிற்குசுமையாக. (ஆட்)

ஏழுமைந்தர்களையும் எவ்விதம்பெற்றாளோ
என்னஆச்சரியமம்மா
பாழும்பிள்ளைகளுக்கு படியரிசியோர்வேளை
படைத்தாலும்அவர்கட்கு பசிதீருமோஅம்மா. (ஆட்)

நமதுவீட்டிற்கவர்கள் வந்திடாமுன்னமே
காமேதுரத்தவேணும்
எமதூதர்களைப்போல எதிரேவந்துவிட்டார்கள்
என்னசெய்குவேனினி என்மனம்பதறுதே. (ஆட்)

அலங்காரி (வசனம்) ஐயோ! இதென்ன அநியாயம் முன்னே இருந்ததெல்லாம் சீதனமாய் எடுத்துக்கொண்டு போனளே அது போதாகுறைக்கு இன்னமும் மீதியாயிருப்பவையெல்லாம் எடுத்துக் கொண்டுபோகவா சரி, சரி, என் புருஷனை ஓர் பைத்தியக்காரனை மதித்துக்கொண்டாள். இனி நாம் சும்மா இருக்கக்கூடாது கதவைமூடி தாளிட்டுவைப்பாய். எவ்வளவுநேரம் காத்திருந்தாலும் திறக்க வேண்டாம். அப்படியே ஓடிப்போகட்டும்.

சகி (வசனம்) நல்ல தம்மணி.

நல்லதங்கை (வசனம்)

பிள்ளைகளே! இதுதான் உமது அம்மான்வீடு ஆ இதென்ன ஆச்சர்யம்? கதவைமூடி வைத்திருக்கின்றனரே.

நல்லதங்கை - தரு.

இவ்வாரத்தி (யென்ற வர்ணமெட்டு.)

அண்ணியம்மா அண்ணியம்மா அண்ணனிடதேவி
அண்ணனைமணந்தவளே ஆனவந்தமதனி
காலுங்கடுக்கின்றதம்மா கருணையுள்ள அண்ணி
பாலர்முகம்பார்த்தாகிலும் கதவைத்திறந்திடுவீர்
என்னோர்முகத்தினாலும் ஏழைமுகம்பாரா
இன்னலிதம்மெள்ளயானல் என்னசெய்வேன் அண்ணி.

நல்லதங்கை - வசனம்.


ஆ! இதென்ன ஆச்சர்யம் நாம் இத்தனை நேரமாய் கத்தி கத்தி அழுதும் கதவைத்திறக்கவில்லையே இனியென்ன செய்கிறது.

நல்லதங்காள் - சந்தம்.

பதிவிரதாயான் மெய்யேயானால்
பவிரென் நிகூதனமே
கதவுதிறந்திட கிருபைபுரிவாய்
காசிவாழ்விஸ்வேசா

வசனம்.

காசி விஸ்வேசா! கைலயங்கிரிவாசா! யானென்னுடைய வறுமையினால் மனந்திகைத்து அண்ணன் வீட்டுக்குச் சென்று பசியில்லாமல் அமுதருந்துவோமென்று வந்ததும், பாதகியாகிய இந்த அலங்காரி கதவை மூடி வைத்துத்திறவாமலிருக்கின்றனளே ஜெகதீஸ்வரா! இனி என்ன செய்வேன் பரமேஸ்வரா யான் பதிவிரதையாயிருப்பது உண்மையாயிருந்தால் இந்தக் கதவு தானே திறக்க வேண்டும் கர்த்தவ்யமே.



கதவு திறக்கப்பட்டது.

அலங்காரி-வசனம்.

ஆ! சகி! இதென்ன ஆச்சர்யம் இவள் சொன்னவுடனே கதவு திறக்கப்பட்டதே.





நல்லதங்காள் பிள்ளைகள் - மாங்காயையும்

தேங்காயையும் எடுப்பது.

—(*)—

அலங்காரி - தரு.

கர்த்தவ்யமே (யென்ற வர்ணமெட்டு.)

பல்லவி.

எப்படிபத்ருமர்தம் இருந்ீரோ தாய்வயற்றில்
இத்தனைபதட்டமாமா

அநுபல்லவி.

ஒப்புவமையில்லாமல் ஓடிநாற்புரத்திலும்
கொப்பெனகனிகளைக் கொள்ளையிடுகிறீரே(எப்)

சரணம்.

மாங்காயைத்தொடலாமா—அச்சமில்லாமல்
தேங்காயைத் தொடலாமா
ஆங்காரமாய்ப்பேசினால் அடிப்பேன்முறத்தினாலே
போங்காலமோஉமக்கு பொறுக்கவந்தபயலே(எப்)

வசனம்.

அடா பசகளேமாங்காயைஎடுக்காதீர்கையையொடித்துவிடுவேன். சகி! இதென்ன அநியாயம் இப்படி கொள்ளையிடுறரே ஐயையோ! சீ! துஷ்டப்பசகளே தேங்காயை எடுக்காதீர்.

## அலங்காரி பிள்ளைகளை அடிப்பது.

ஞானசேகரன் (வசனம்.) மாமி யாங்கள்உமது மருமகப்பிள்ளைகளாச்சுதே எங்களுக்குச் சொந்தமில்லையா?

அலங்காரி (வசனம்.) சரிதான் போங்களடா திருட்டுப்பசகளே.

{ அலங்காரி பிள்ளைகளுக்கு
அழுகிப்போன தேங்காயும்
மாங்காயும் கொடுப்பது. }

---

பிள்ளைகள் (வசனம்,) அம்மா! வயறு பசிக்கின்றது மாமி அடிக்கின்றாள் என்ன செய்வோமம்மா.

ஞானசேகரன் (வசனம்.)

அம்மா! இதென்ன அநியாயம் நாம் இத்தனைநாளாய்ப் பசியால் மெலிந்து அம்மான்வீட்டிற் சென்றாகிலும் அன்னம் புசிப்போமென்றுவந்து, இங்ஙனம் குவித்திருக்கும் மாங்காயையும் தேங்காயையும் எடுத்தவுடனே இந்த குரூரகுணமமைந்த மாமி எங்களை அடித்துத் துரத்துகிறாளே இந்த விதிவசத்திற் கென்னசெய்வோம்.

### நல்லதங்காள் - தரு.

அடபாலா யிந்த (வென்ற வர்ணமெட்டு.)

1 பூமியில்நமக்குற்ற பொல்லாதகாலத்தால்
மாமியடித்தாளென்று மனத்துயரடையாதீர். (பூமி

நமதுகாலமிவ்விதம் ஆச்சுதேமைந்தரே
தமயன்வீட்டில்வந்து தவிக்கலானேனையோ (பூமி)

உண்ணும்உணவளித்து உபசரிப்பாரில்லாமல்
மண்மீதிருந்துயான் மனமெலிந்திடலானேன். (பூமி)

வசனம்.

ஆ! மைந்தரே! நாமென்னசெய்வோம் நமது காலம் இவ்வித விபரீதமாய் விசனப்படலாச்சுதே, இனி நமது பசிதணிய அன்னங் கொடுத்து அஞ்சாதீரென்று ஆதரிப்பவரில்லையே, ஆ! ஜெகதீசா.



### பிள்ளைகள் - தரு.

சிந்தைமகிழ்ந்து (வென்ற வர்ணமெட்டு.)

காதையடைக்குது கண்கள்சுழலுது
கால்களும் சோருதம்மா - என்னம்மா
கால்களும் சோருதம்மா - பசி

வாதைபொறுக்காம லாவிதுடிக்குது
வயறெரிகின்றதம்மா - என்னம்மா
வயறெரிகின்றதம்மா.

பாழும்வயற்றுக்குக் கூழாயினும்கொஞ்சம்
பக்ஷமாய்த்தாருமம்மா - என்னம்மா
பக்ஷமாய்த்தாருமம்மா - எம்மைச்

சூழும்பசியைத் தணித்துக்கொள்ளுகிறோம்
சோருதே தேகமெல்லாம் - என்னம்மா
சோருதே தேகமெல்லாம்.

அம்மான்வீட்டிற்கெம்மை அழைத்துக்கொண்டுவந்தும்
அரும்பசிதணிக்காமல் - என்னம்மா
அரும்பசிதணிக்காமல் - நீ

சும்மாயிருப்பது நீதியோஐயையோ
சோருதே தேகமெல்லாம் - அம்மா
சோருதே தேகமெல்லாம்.

வசனம்.

அம்மா! மெத்தப் பசியாயிருக்கின்றதே கொஞ்சங் கூழாயினுங் கொடுக்கச் சொல்வாயம்மா.

நல்லதங்கை - வசனம்.

ஆ! ஜெகதீஸ்வரா இதென்ன அநியாயம் என்மைந்தர் பசியால் அடிக்கவும் யான் கண்டு விசனப்படவும் இந்த குரூர குணமமைந்த பாவியாகிய அண்ணி சிரிக்கவும் ஆச்சுதோ? ஆ ஜெகதீஸ்வரா? இனி என்னசெய்கிறது குழந்தைகள் பசியை எவ்விதமாய்த் தணிப்பேன்:— அண்ணி! இந்த குழந்தைகளுக்கு கொஞ்சம் கூழாயினுங் கரைத்துக் கொடுப்பாயம்மா.

அலங்காரி (வசனம்.) சரி கூழைக்குடித்து விட்டு ஓடிப்போகின்றீரா?

நல்லதங்கை (வசனம்.) அப்படியே மஹாபாக்கியம் தாயே.

அலங்காரி (வசனம்.) சகி! இதென்ன வெகு துன்பமாயிருக்கின்றது நமது தோட்டத்தில் நாட்சென்று கெட்டுப்போன கேழ்வரகை கொட்டியிருக்கின்றோமே அதில் கொஞ்சம் எடுத்துக் கொண்டுவா ஒன்றுபாதியா யாவது அரைத்து அடுப்பில் வைத்துக்கொதிக்கச் செய்து இவள் முகத்தில் உடைக்கலாம்.

சகி (வசனம்.) ஆ! இதென்ன அநியாயம்? குடிப்பெண் மனந்நொந்தால், இவள் குடித்தனம் நாசமாகாதோ? ஐயோ பாபம். நமக்கென்னஎப்படியாகிலும் போகிறார்கள். அம்மா இதோ எடுத்துக்கொண்டு வந்தேன்.

{ அலங்காரி கேழ்வரகை ஒன்று
பாதியாயரைத்து அடுப்பில் வைத்து
வாழைப்பட்டையைவைத்தூதுவது. }

நல்லதங்காள் - தரு. விஜயவிக்னேஸ்வரனே (யென்றவர்ணமெட்டு.)

பல்லவி.

அக்கினிபகவானே - பற்றியெரிவாய்
அக்கினிபகவானே.

அநுபல்லவி.

மக்கள்பசிதணிய மதனிவருத்தம்நீங்க
இக்கென்றெரிவாயென்றுன் திருவடியைப்பணிந்தேன் (அ)

சரணம்.

உத்தமியாகயான் உலகிலிருப்பது
உண்மையானால்தேவே உடனேபற்றியெரிந்து
இத்தநிகூழ்கொதித்து என்மனந்தாபசியாற
இன்பமாய்வரந்தருவீர் உன்பாதம்நம்பினேன். (அ)

{ திடீரென அக்கினிப்பற்றி
யெரிந்துகூழ்கொதிப்பது. }

அலங்காரி (வசனம்.) சகி! இதென்ன அச்சரியம் வாழைப்பட்டை எரிகின்றதைப்பார்த்தனையா? ஐயோகூழுங்கொதித்துவிட்டதே என்னமாய் மனந்துணிந்து இவர்களுக்கு கொடுப்பேன்.



நல்லதங்காள் (வசனம்,) ஆ! அண்ணி! கூழ்கொதித்துவிட்டதே இனியாகிலும் உன்மனமிரங்கிகுழந்தைகள் பசியாற கொஞ்சம் கொடுப்பாயம்மா,



அலங்காரி - கூழ்பானையை
நல்லதங்காள் தலைமீது
உடைப்பது.

அலங்காரி - தரு.
வேல்முருகா துணைவா (யென்ற வர்ணமெட்டு.)

பல்லவி.

தூக்கியுடைப்பேனுன் தலையில் - என்னை
தொந்தரை செய்யவாவந்தாய், (தூக்)

அநுபல்லவி.

ஆக்கப்பொறுத்தவள் ஆறப்பொறுக்காமல்
அவசரப்படுகிறாய் அறிவுகெட்டவளே (தூக்)

சரணங்கள்.

கள்ளிஉனக்கென்ன பதட்டம் - நீ
கதறினாலெனக்கென்ன நஷ்டம் - இன்று
உள்ளபொருள்மீது இஷ்டம் - வைத்து
உபாயமாய்வந்தாயே நஷ்டி
பிள்ளையைச்சாக்கிட்டு பூதம்விழுங்கின
கொள்ளையைப்போலாக கூச்சலிடுகின்றாய். (தூக்)

## நல்லதங்காள் (வசனம்.)

ஆ! இதென்ன அநியாயம் இப்படியும் செய்வாருண்டோ ஆ! விதிவசமே ஜெகதீஸ்வரா.

## பிள்ளைகள் (வசனம்.)

அம்மணி! அம்மான்வீட்டில் வந்தால் அறுசுவை பதார்த்த சுகபோஜனம் புசித்து மனோல்லாசமா யிருக்கலாமென்று ஆசையாய் வந்தனையே இதென்ன ஆபத்தான வேடிக்கையா யிருக்கின்றதே தாயே.

## அலங்காரி (வசனம்.)

ஆ! ஹா! மனிதராய்ப்பிறந்தால் சற்றேனும் பொறுமையில்லையா நீ எப்போதும் அன்னம் புசிக்கவில்லையா? இந்தக் கேழ்வரகின் கூழ் கொதிப்பதற்குமுன் இவ்வளவு அவசரப்படுகின்றனையே பார்ப்பவர்கள்என்னைப் பரிகாசிப்பதற்காகவே திருட்டுவேஷம் போட்டுக்கொண்டு ஆட்டுமந்தைகளைப்போல் இந்தப் பிள்ளைகளையெல்லாம் பெற்றுக்கொண்டு வந்தாய், சரி! சரி! நீ இத்தருணமே வந்தவழியைப் பார்த்துக்கொண்டு போவாயம்மா.

## நல்லதங்கை (வசனம்.)

ஆ! மைந்தர்களே அண்ணனை நம்பிவந்து ஆற்றொணு ஆபத்தாய்விட்டது. இனி யாதும் மனவருத்தமின்றி வருவீர். நமக்கு பரமேஸ்வரன் தான் துணை.

பிள்ளைகள் (வசனம்.) அப்படியே மஹா சந்தோஷமம்மா.

குலசேகரி என்னும் இயற்பெயருடைய

நல்லதங்காள் சரித்திரம்


(முதற்பாகம்.)

சம்பூரணம்.

—(*)—

உ

சரஸ்வதி துணை.



சகல நாரீகட்குப் பெரியாராலும்

ஆடிவருகின்ற

பதிவிரதையென்னும்

# லலிதாங்கி சரித்திரம்.

சிறுவாகிய சித்ரசேத்திரப் பதியில் இராஜீகம் புரிந்திருந்த லலிதாங்கி தன்மனதிற்கிசைந்த மணாளனாகிய அழகேசனை மணம்புரிய, தற்கு வெகுவித சாமர்த்தியஞ் செய்தார் அவன் சிவபக்தனாயிருப்ப தனால் ஸ்திரீகளை விரும்பலாகாதென மறுத்து லலிதாங்கியின் காலில் விலங்குபூட்டி ஆரண்யத்தில் விடுக்க ஆண்பூதம் ஒன்று எடுத்துச் சென்று பெண்பூதத்தைக் கொன்றுவிட்டு, லலிதாங்கியைத் தனக்கு மனைவியாயிருக்கும்படி வேண்டுதலும், அந்த மாதரசி தந்திரமாய்க் காட்டுக்குத்துரத்திவிட வேட்டையாடவந்த சாத்திபன் அதனைக் கொன்றுவிட்டு லலிதாங்கியை அழைத்துச்சென்றும் தனது கற்பு நிலை தவறாமல் கள்வரிடம் அகப்பட்டு அவர்களையும் ஏமாற்றிவிட்டு தாங்கேபடமாறிவரால் அழகேசனை மணம்புரிந்து, சுகமாய்த்தாமிருந்த இந்த லலிதாங்கி சரித்திரத்தை, யாவரும் வாசிக்கவேண்டுமென்பதாய் தாருக்கருத்துடனும், சித்திரப்படங்களுடனும், அச்சிட்டு விற்பனைசெய் கிறேரும்.

இதன்விலை, அணா 4.

[illegible] வி. பி. சார்ஜ் [illegible]

இப்படிக்கு, ஏ. ரங்கநாதமுதலியார்.

17-4-97.